இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 11-09-2024

# உலகத் தமிழர்க்கு முதல்வர்!

முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக அமெரிக்கா சென்ற மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அமெரிக்க வாழ் தமிழ் நெஞ்சங்களில் நிறைந்துவிட்டார்கள். சிகாகோ மாநகரில் அவர் ஆற்றிய உரை என்பது உலகத் தமிழர்க்கு ஆற்றிய உணர்ச்சிமிகு உரையாக அமைந்துவிட்டது.

தமிழர்கள் வாழாத நாடு இல்லை என்று சொல்லத்தக்க வகையில் உலகம் பரவிய இனமாகத் தமிழினம் இருக்கிறது. அமெரிக்க வாழ் தமிழர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டும் இருக்கிறது. நாடுகள் கடந்து பணிகளுக்காகச் சென்றவர்களுக்கு தமிழ் மொழியின் மீது இருக்கும் பற்றும், தமிழினத்தின் மீது உள்ள மாறாத நட்பும், தமிழ்நாட்டின் மீது இருக்கும் அன்பும் எந்நாளும் மாறாது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது முதலமைச்சருக்கு சிகாகோ மாநகர் அளித்த வரவேற்பு.

**நிகழ்ச்சி நடைபெற்ற இடம் சிகாகோவாக இருந்தாலும், அமெரிக்காவின் மற்ற மாநிலங்களில் இருந்தும் தமிழர்கள் முந்தைய நாளே சிகாகோவுக்கு வரத் தொடங்கி விட்டார்கள். 'நாங்கள் சிகாகோவை நோக்கிச் செல்கிறோம்' என்று சமூக வலைதளங்களில் அமெரிக்க வாழ் தமிழர்கள் பதிவுகளைப் போடத் தொடங்கினார்கள். ஐந்தாயிரம் பேர் மட்டுமே அமர முடிந்த அரங்கில் பதிவு செய்தோர் எண்ணிக்கை அதை விட அதிகமாகிக் கொண்டே போனது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீதான அன்பும் பாசமும் ஆகும். தமிழ்நாட்டுத் தமிழர்களை மட்டுமல்ல, உலகத் தமிழர்க்கும் முதல்வராக உயர்ந்து நிற்கிறார் என்பதற்கு எடுத்துக்காட்டாக அந்தக் காட்சிகள் அமைந்திருந்தன.**

மாபெரும் அரங்கில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உள்ளே நுழையும் போதே, தமிழ்நாட்டு மாநாட்டு மேடைக்குள் அவர் நுழையும் போது இருக்கும் உற்சாகம் அங்கு தோன்றியது. விண்ணதிர விசில் அடித்தும் – அரங்கம் கலங்க கைதட்டியும் வரவேற்றுள்ளார்கள் தமிழர்கள்.

"எனக்கு என்ன தோன்றுகிறது என்றால் பேசாமல் உங்கள் முகத்தை மட்டுமே பார்த்துக் கொண்டே இருந்தால் போதும். தமிழ்நாட்டில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டால், எப்படி இருக்குமோ, அதைவிட அதிகமான உணர்வுப் பெருக்கோடு சிகாகோ நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது" என்று தொடங்கினார். "நான் இங்கிருந்து தமிழ்நாட்டுக்கு திரும்பிய பிறகும், உங்களின் இந்த ஆரவாரமும் மகிழ்ச்சியான முகங்களும்தான் எப்போதும் என் ஞாபகத்துக்கு வரும்" என்று தனது உரையை முடித்தார். அந்தக் கூட்டம் முதலமைச்சரின் மனதில் எத்தகைய நீங்கா நினைவுகளை ஏற்படுத்தி இருக்கும் என்பதை இச்சொற்கள் சொல்லும்.

அன்னைத் தமிழ் பற்றியும், பேரறிஞர் அண்ணா பற்றியும் கவிதைப் புகழை கடகடவென முதலமைச்சர் சொன்னபோது அரங்கம் அதிர்ந்தது. அமெரிக்காவின் புகழ்பெற்ற மருத்துவர்களில் ஒருவரான சோம.இளங்கோவன் அவர்கள், 'கவிதை வளம் கொண்ட அருமையான பேச்சு இது' என்று இணையத்தில் எழுதி இருக்கிறார்கள். 'திராவிட மாடல் அரசு எப்படிச் செயல்படுகிறது?' என்று முதலமைச்சர் கேட்டதும், 'சிறப்பாகச் செயல்படுகிறது' என்று கூட்டமே ஒருமுகமாக வழிமொழிந்து வாழ்த்துச் சொன்னது.

**தமிழினத்துக்கு என்ன பெருமை இருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்கள் பட்டியலிட்டுச் சொன்னார்கள். "தமிழ்த்தாயின் குழந்தைகள் நாம் என்பதுதான் நம்முடைய பெரும் அடையாளமாக இருக்கிறது. இனம், மொழி, நாடு, சாதி, மதம், பால், வர்க்கம், நிறம் என்று எந்தப் பாகுபாட்டுக்கும் இடமளிக்காமல், உலக உயிர்கள் அனைத்துக்குமான பொதுமறையைத் தந்த வான்புகழ் வள்ளுவரை தந்த மண்ணுக்கு சொந்தக்காரர்கள் நாம்! 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று எல்லோரையும் சொந்தமாக கருதி இலக்கியம் படைத்தபுகழுக்குச் சொந்தக்காரர்கள் நாம்! கீழடி கண்டுபிடிப்புகள் மூலமாக, நான்காயிரம் ஆண்டுக்கு முன்பாகவே எழுத்தறிவு பெற்றும், நகர நாகரிகத்துடனும் மேம்பட்ட சமூகமாக வாழ்ந்த வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் நாம்!" என்று சொன்ன போது பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞரின் குரலாக ஒலித்தார் முதலமைச்சர் அவர்கள்.**

தமிழ்நாட்டுத் தமிழர்களை மட்டுமல்ல; உலகம் முழுவதும் வாழும் தமிழர்களுக்கு பாதுகாப்பரணாக திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட மாடல் அரசும் செயல்பட்டு வருவதை பட்டியலிட்டுச் சொன்னார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். தமிழர்கள் எங்கு பாதிக்கப் பட்டாலும், "நமக்கு என்றும் தாய்வீடாக தமிழ்நாடு இருக்கிறது" என்ற உணர்வை நம்பிக்கையை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்படுத்தி வருவதைச் சுட்டிக் காட்டினார் முதலமைச்சர் அவர்கள்.

**தமிழர்களது ஒற்றுமை எந்த சூழலிலும் கெடக் கூடாது என்பதை திரும்பத் திரும்ப வலியுறுத்தினார் முதலமைச்சர் அவர்கள். சாதி – மத வேறுபாடுகளை வீழ்த்தும் வல்லமையும், எல்லோரையும் ஒற்றுமைப்படுத்தும் வலிமையும் தமிழுக்குத்தான் இருக்கிறது என்பதை அழுத்தமாகச் சொன்னார். "உங்களிடம் நான் வைக்கும் ஒரே கோரிக்கை. உங்களுக்குள் எந்தப் பிளவுகளும் ஏற்பட அனுமதிக்காதீர்கள். ஒரு தாய் மக்களாக வாழுங்கள். உங்கள் உயர்வுக்குக் காரணமான அறிவையும், உழைப்பையும் மட்டும் நம்பி, வாழ்க்கைப் பயணத்தை தொடருங்கள்." என்று முதலமைச்சர் வைத்த வேண்டுகோள் என்பது மானுடத்தை மட்டுமே வலியுறுத்திய தந்தை பெரியாரின் குரலாக இருந்தது. 'மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு' என்று சொன்ன பெரியாரின் கொள்கையின் நீட்சியாக அமைந்திருந்தது முதலமைச்சரின் வேண்டுகோள்.**

உலகத்தின் குரலாக அமைந்திருந்தது முதலமைச்சர் அவர்களின் உரை. உலகம் எதிர்பார்க்கும் உரையாக இருந்தது. உலகத்தை மேம்படுத்தும் உரையாக அமைந்திருந்தது.

இந்த உரையின் மூலம், உலகத் தமிழர்களின் முதல்வராக உயர்ந்து காட்சி அளிக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 8.9.2024 அன்று சிகாகோவில், அமெரிக்க நாட்டிலுள்ள பல்வேறு தமிழ்ச் சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்க நாட்டில் அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள முதலமைச்சர் அவர்களின் பயணம் வெற்றி பெற வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, முதல்வரின் துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அயலகத் தமிழர் நலவாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி ஆகியோர் உடனிருந்தனர்.

### இலங்கைச் சிறையிலுள்ள

# அனைத்து மீனவர்களையும் விடுவித்திட நடவடிக்கை எடுப்பீர்!

## ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சரை வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, செப். 11-

இலங்கை வசமுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும், அவர்கள் மீது விதிக்கப்பட்ட அபராதத் தொகையினை தள்ளுபடி செய்திடவும், கூட்டுப்பணிக் குழுக் கூட்டத்தை நடத்திடத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தியும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.09.2024 அன்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், இலங்கை அதிகாரிகளால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதைக் குறிப்பிட்டு, கடந்த 7.09.2024அன்றுபுதுக்கோட்டைமாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்களும், INDTN08 MM198, INDTN08MM28 மற்றும் INDTN 08MM52 பதிவெண்கள் கொண்ட அவர்களது மூன்று மீன்பிடி விசைப்படகுகளும் இலங்கைக் கடற்படையினர் சிறைபிடித்துள்ளதைக் குறிப்பிட்டுள்ளார்.

**தமிழக மீனவர்களின் சக்திக்கு மீறிய அபராதங்கள்!**

2024ஆம் ஆண்டில் மட்டும் (7.09.2024 வரை) 350 மீனவர்கள் மற்றும் 49 மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளன என்றும், கடந்த ஆறு ஆண்டுகளில் இதுவே மிக அதிகமானதென்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும், இலங்கை நீதிமன்றங்கள் மீனவர்களின் சக்திக்கு மீறிய அபராதங்களை விதித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிகாரிகளின் இத்தகைய நடவடிக்கைகள், தமிழக மீனவர்கள் அங்கு சிறையில் இருக்கும் காலத்தை நீட்டிக்க வழி செய்வதோடு, ஏற்கனவே துயரத்தில் உள்ள மீனவக் குடும்பங்களை மிகுந்த வேதனைக்குள்ளாக்கி அவர்களுக்கு மிகப் பெரிய பொருளாதார இழப்பிற்கும் வழி வகுக்குமென்று தனது முந்தைய கடிதத்திலேயே சுட்டிக்காட்டியுள்ளதை நினைவு கூர்ந்துள்ளார்.

**கூட்டுப்பணிக்குழுக் கூட்டத்தை விரைந்து நடத்திடுக!**

எனவே, இலங்கை சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உறுதியான தூதரக முயற்சிகளை மேற்கொள்ளுமாறும், மீனவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடுமையான அபராதத் தொகையைத் தள்ளுபடி செய்திடவும், கூட்டுப்பணிக் குழுக் கூட்டத்தைக் விரைந்து நடத்திடவும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தலையிட்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தி.மு.க. பவள விழா – முப்பெரும் விழா!

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் கழகத்தினர் அனைவரும் வீடுகளில் கழகக் கொடியேற்றுவோம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள்!

*புதுக்கோட்டை, செப்.11 -*

*புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர், சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-*

*பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம், தனது 75வது ஆண்டினை பவள விழாவாக கொண்டாடி மகிழ்ந்து வருகிறது.*

*கழகத்தின் பவள விழா ஆண்டில் கழகத்தை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான வருகிற செப்டம்பர் 15 அன்று காலை கழகத்தின் அனைத்து கிளைகளிலும் உள்ள கழகக் கொடி கம்பங்களை புதுப்பித்து, கழக லட்சிய இரு வண்ணக் கொடியை கம்பீரமாக ஏற்றிட வேண்டும் என்றும், அத்துடன் கழக தொண்டர்களால் தான் இந்த பேரியக்கம் 75 ஆண்டுகளை கடந்து கம்பீரமாக பீடுநடை போட்டு வருகிறது என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டிடும் வகையில், கழகத் தோழர்களின், அனைவரது வீடுகளி லும் கழகக் கொடியை பட்டொலி வீசி பறக்க செய்திட வேண்டும் என்று நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் முதல்வர், பாசமிகு தலைவர் தளபதி அவர்களின் அன்பு கட்டளைக்கு இணங்க புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் வட்டங்கள், அனைத்து கிளைகளில் உள்ள அனைத்து கொடிக்கம்பங்களையும் வர்ணம் தீட்டி,*



*புதுப்பித்து வருகிற செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாள் அன்று காலை 9 மணிக்கெல்லாம் அனைத்து கழக முன்னோடிகளை வைத்து, கழகக் கொடியை ஏற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

*அத்துடன் புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் முழுவதும் உள்ள மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், உள்ளிட்ட ஒட்டு மொத்த கழகத்தினர் அனைத்து கிளைகளிலும் உள்ள கழகக் கொடிக் கம்பங்களை புதுப்பித்து கழகத்தின் இலட்சிய இருவண்ணக் கொடியை கம்பீரமாக ஏற்றிட வேண்டும் என்றும்,*

*அத்துடன் கழகத் தொண்டர்களால் தான் இந்த பேரியக்கம் 75 ஆண்டுகளை கடந்து கம்பீரமாக பீடுநடை போட்டு வருகிறது என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டிடும் வகையில்,*

*கழகத் தோழர்களின் அனைவரின் வீடுகளிலும் கழக கொடியை பட்டொளி வீசி பறக்கச் செய்திட வேண்டும்.*

*"கட்டுக்கோப்பான தொண்டர்கள் நிறைந்த இயக்கம் தி.மு.க." என்பதை நாட்டு மக்களுக்கு பறைசாற்றிடும் வகையில் கழகத்தினர் அனைவரின் இல்லங்களிலும் கழகக் கொடியை கம்பீரமாக ஏற்றி, தி.மு. கழக பவள விழாவை கழகத்தினர் குடும்ப விழாவாக கொண்டாடி மகிழ்ந்திட வேண்டும் என்றும் கழகத்தினர் அனைவரையும் இரு கரம் கூப்பி கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.*




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (09.09.2024) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுதவிகள் வழங்கும் விழாவை மதுரை மாவட்டத்தில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி கலையரங்கில் நடைபெற்ற விழா நிகழ்வில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 1189 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 100.54 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், மேயர் மு.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், செ.ஸ்டாலின்குமார், மு.பழனியாண்டி, மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி ஆணையர் சரவணன், உதவி ஆட்சியர் (பயிற்சி) அமித்குப்தா, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) மரு.சு.சுரேஷ், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.